நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் SIR தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் குறித்த கலந்தாய்வு கூட்டம், மாவட்ட திமுக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு தலைமையில் நடைபெற்றது. இதில் கழக துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., ஆலோசனைகளை வழங்கினார். உடன் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர் அரசு கொறடா கா.ராமசந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் வடக்கு பகுதி 72 அ வட்ட கழக செயலாளர் எம்.இசட். அபோய் (எ) முகமதுநைமுதின் உடல்நிலை பாதிக்கப்பட்டு சென்னை கிரிம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கபட்டுள்ளார். தகவல் அறிந்து அமைச்சர் பி.கே.சேகர்பாபு மருத்துவமனைக்கு சென்று அவரது மனைவி யாஸ்மின், மகன் வசிம் மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியும் அவரது உடல்நிலை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தும், அவர் விரைவில் குணமடைய அனைத்து மருத்துவ உதவிகளையும் செய்யுமாறும் அனைத்தையும் மாவட்ட கழகம் ஏற்றுகொள்ளும் என்று கூறினார். உடன் மேயர் பிரியா, பகுதி செயலாளர் செயலாளர் செ.தமிழ்வேந்தன், எஸ். புஷ்பராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

மதினாவில் பேருந்து விபத்து:

இந்தியர்கள் உயிரிழந்தது குறித்து அதிர்ச்சிக்குள்ளானேன்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 18- "மதினாவில் நிகழ்ந்த பேருந்து விபத்தில் இந்தியர்கள் உயிரிழந்த செய்தியறிந்து மிகவும் அதிர்ச்சிக் குள்ளானேன்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

மதினாவில் நிகழ்ந்த துயரமான பேருந்து விபத்தில் இந்தியாவில் இருந்து உம்ரா புனிதப்பயணம் சென்றிருந்த பலர் உயிரிழந்த சம்பவம் குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு

மதினாவில் நிகழ்ந்த துயரமான பேருந்து விபத்தில் சிக்கி, இந்தியாவில் இருந்து உம்ரா புனிதப்பயணம் சென்றிருந்த பலர் உயிரிழந்த செய்தியறிந்து மிகவும் அதிர்ச்சிக்குள்ளா னேன்.

உற்றாரை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு இத்துயர்மிகு வேளையில் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்த நபர் முழுமையான மருத்துவ சிகிச்சை பெற்று விரைவில் நலமடைய விழைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைத் தளப் பதிவில் கூறியுள்ளார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு!

ஆவடி சட்டமன்றத் தொகுதி நிகழ்ச்சிகள் - முன்னேற்பாட்டுப் பணிகள்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆய்வு!

திருவள்ளூர், நவ.18;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதி திருவேற்காடு நகராட்சி, சுந்தரசோழபுரம் பகுதியில் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துக்கொள்ள உள்ள நிகழ்ச்சிக்கான இடத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகளை திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சுந்தர சோழபுரம் பகுதியில், பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகளை துவக்கி வைத்தும், புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க விழா மற்றும் கழக நிகழ்ச்சி பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலை திறந்து வைக்க உள்ளார்.

இந்நிலையில் அதற்கான முன்னேற்பாடு பணிகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கைகள் தொடர்பாக மாவட்ட திமுக செயலாளரும், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரு மான பல்வேறு துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். அப்போது அனைத்து பணிகளையும் சிறப்பான முறையில் குறித்த காலத்தில் முடிக்க துரிதமாக செயல்பட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறித்தினார்.

இந்த ஆய்வின் போது மாநில இளைஞரணி துணை செயலாளர் பிரபு கஜேந்திரன், நகர செயலாளர், நகரமன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், மாநகர செயலாளர் சன் பிரகாஷ், பகுதி செயலாளர்கள் ராஜேந்திரன், பேபிசேகர், நாராயண பிரசாத், பொன் விஜயன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ் குமார் மற்றும் பல்வேறு துறைகளின் அலுவலர்கள் திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின்

அரிய ஆவணங்களை ஆய்வு செய்வோரிடமிருந்து - விண்ணப்பங்கள்!

அமைச்சர் கோவி.செழியன் வேண்டுகோள்!

சேலம், நவ. 18-

தமிழ் சமூகத்தின் பெருமைமிகு வரலாற்றினை வெளிகொண்டு வரும் வகையில் தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் அரிய ஆவணங்களை ஆராய்ந்து ஆய்வு மேற்கொள்ள ஆராய்ச்சியாளர்களிடமிருந்து 28.11.2025 வரை விண்ணப்பங்கள் பெறப்படும் - என்று உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வெளியாள செய்திக்குறிப்பு வருமாறு:-

தமிழ் சமூகத்தின் பெருமைமிகு வரலாற்றினை அனைவரும் அறிந்து கொள்ள தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் அரிய வரலாற்று ஆவணங்களை மாதம் ரூ.50,000 உதவித் தொகையுடன் ஆராய்ந்து ஆய்வு மேற்கொள்ள ஆராய்ச்சியாளர்கள் தேவை என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:

பழமைமிகு நமது தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் மூன்று நூற்றாண்டுகளுக்கு முந்தைய அரசுத் துறை ஆவணங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. "மெட்ராஸ் ரெக்கார்ட் ஆபீஸ்" என்ற பெயரில் அழைக்கப்பட்ட இக்காப்பகம் 1909 முதல் தற்போதுள்ள ஆவணக் காப்பகக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

1633ஆம் ஆண்டு முதலான புத்தகங்களும், 1670ஆம் ஆண்டு முதலான பழமையான ஆவணங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் வரலாற்றினை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் 1973ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றம் மாறிவரும் காலத்திற்கேற்ப மீளுருவாக்கம் செய்யப்படும் என்றும், ஆண்டுதோறும் 10 முதல் 15 ஆய்வுகள் வரை மேற்கொள்ளப்படும் என்ற முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றம் மீளுருவாக்கம் செய்யப்பட்டும், 20 நபர்களுக்கு ஆராய்ச்சி உதவித் தொகை வழங்கப்பட்டு வரலாற்று ஆய்வுகள் மேற்கொள்ளவும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் அரிய ஆவணங்களை ஆராய்ந்து தமிழ்நாட்டின் பெருமைமிகு வரலாற்றினை வெளிகொண்டு வரும் வகையிலான ஆராய்ச்சியை ஓராண்டுக்கு மாதம் ரூ. 50,000 ஆராய்ச்சி உதவித் தொகையுடன் மேற்கொள்வதற்கு முதுகலை பட்டதாரிகள் அல்லது தனிநபர் ஆராய்ச்சியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் நேற்று (17.11.2025) முதல் பெறப்படும்.

இதற்கான விண்ணப்பப் படிவம், தகுதி மற்றும் பிற விவரங்கள் அனைத்தும் www.tamilnaduarchives.tn.gov.in என்கிற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தகுதியுள்ள ஆராய்ச்சியாளர்கள் தங்களது விண்ணப்பங்களை இணையவழியில் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் 28.11.2025 வரை விண்ணப்பித்து பயன்பெருமாறு கேட்டுக்கொள்கிறேன். விண்ணப்பங்கள் இணையவழி மட்டுமே பெறப்படும்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் 20—ஆம் தேதி

தி.மு.க. மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா. சிவா அறிவிப்பு !

புதுச்சேரி, நவ.18-

புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகிகள், தொகுதி செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வருகின்ற 20.11.2025 வியாழக்கிழமை மாலை 05.00 மணி அளவில், புதுச்சேரி லப்போர்த் வீதியில் உள்ள கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தலைமைக் கழக ஒருங்கிணைப்பாளர், கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன், எம்.பி. தலைமையிலும், எனது முன்னிலையிலும் நடைபெறும் இக்கூட்டத்தில், புதுச்சேரி மாநில கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி கழகச் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: -

1. துணை முதல்வர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49-வது பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது சம்பந்தமாக.

2. சிறப்பு தீவிர வாக்காளர் சீராய்வு பணிகள் குறித்தும்.

3. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி 117 (அ) வட்டச் செயலாளர்

தாயார் திருமதி எல். பிருந்தாவதி மறைவு!

கழக முன்னணியினர் அஞ்சலி!

சென்னை. நவ.18-

ஆயிரம் விளக்கு 117 (அ) வட்டம். மறைந்த எஸ்.லட்சுமணன் மேஸ்திரி அவர்களின் மனைவியும் 117 'அ' வட்ட கழக செயலாளர் தேனா. எல்.தவமணியின் தாயாருமான எல்.பிருந்தாவதி அம்மையார் (எ) பாப்பம்மாள் (வயது 86) 17.11.2025. திங்கட்கிழமை அன்று காலை 9.45 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். செய்தியறிந்ததும் கழக முன்னணியினர், கழகத் தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த திருமதி எஸ்.பிருந்தாவதி அம்மையாரின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (18.11.25, செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 1.30 மணியளவில் ஜெ - பிளாக் 36, எம்.கே.ராதா நகர், தேனாம்பேட்டை சென்னை என்ற முகவரியில் இருந்து புறப்பட்டு நுங்கம்பாக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

கனமழை முன்னெச்சரிக்கை காரணமாக

செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து 1200 கன அடி உபரிநீர் திறப்பு!

பூண்டி ஏரியிலும் தண்ணீர் திறப்பு!

சென்னை, நவ.18-

கனமழை முன்னெச்சரிக்கை காரணமாக, செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து, கூடுதலாக உபரி நீர் திறக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் நிலவும் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக, தமிழ்நாட்டில், சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர் ஆகிய 7 மாவட்டங்களில் மிக கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கனமழை முன்னெச்சரிக்கை காணமாக, சென்னைக்கு குடிநீர் வழங்கும் செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து கூடுதலாக உபரி நீர் திறக்க தமிழ்நாடு நீர்வளத்துறை உத்தரவிட்டது. ஏற்கனவே, 600 கனஅடி உபரிநீர் வெளியேற்றப்பட்டு வரும் நிலையில், கூடுதலாக கூடுதலாக 600 கனஅடி உபரி நீர் வெளியேற்ற நீர்வளத்துறை உத்தரவிட்டது.

இதையடுத்து, நேற்று காலை 8 மணிக்கு, கூடுதலாக 600 கனஅடியுடன் மொத்தமாக ஆயிரத்து 200 கனஅடி உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. 24 அடி உயரம் கொண்ட செம்பரம்பாக்கம் ஏரியின் தற்போதைய நீர்மட்டம் 21.39 அடி உயரமாக உள்ளது. ஏரியிலிருந்து, குடிநீருக்காக 165 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

இதற்கிடையே, பூண்டி ஏரியில் இருந்து, திறக்கப்படும் உபரி நீரின் அளவு 3 ஆயிரம் கனஅடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 35 அடி உயரம் கொண்ட பூண்டி ஏரியின் நீர்மட்டம் 32. 51 கனஅடியாக உள்ளது. இரண்டாம் நாளாக ஏரிக்கு நீர்வரத்து 790 கன அடியாக உள்ளது. கனமழை முன்னெச்சரிக்கை காரணமாக, ஏரியிலிருந்து 3 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ள நிலையில், கொசஸ்தலை ஆறு வழியாக உபரி நீர் வெளியேற்றப்படுகிறது. இதனால், 30 கிராமங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் கூட்டம்!

வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ.18-

சென்னை, நந்தனம், சிஐடி நகர் வாரியத் தலைமை அலுவலகத்தில் நேற்று (17.11.2025) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் தலைமையில் வீட்டு வசதி வாரியக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) பா.கணேசன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி.ஸ்ரேயா பி.சிங், நிதித்துறை துணை செயலாளர் பிரதீக் தயாள், வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் பாலசுப்ரமணியன், மாவட்ட வருவாய் அலுவலர் மணியன், மாவட்ட வருவாய் அலுவலர்கள் சைலேந்தர் (நில எடுப்பு), மருத்துவர் சுரேஷ் (திட்டங்கள்), வாரிய நிதி ஆலோசகர் தரணிபாபு, தலைமை பொறியாளர்கள் கண்ணன், சரவணன் மற்றும் வாரிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி தொகுதிக்கு உட்பட்ட கே.ஜி.கண்டிகை ஊராட்சியில் SIR படிவம் பூர்த்தி செய்யும் பணிகளை மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல். ஏ. நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன் ஒன்றிய செயலாளர் கே.ராஜேந்திரன், தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை அமைப்பாளர் ஜி. சித்திக் அலி, உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

சென்னை, நந்தனம். சிஐடி நகர் வாரியத் தலைமை அலுவலகத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் தலைமையில் வீட்டு வசதி வாரியக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர்கோ.பிரகாஷ், வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு)பா.கணேசன், , தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி.ஸ்ரேயா பி.சிங், நிதித்துறை துணை செயலாளர் பிரதீக் தயாள், வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர்பாலசுப்ரமணியன், மாவட்ட வருவாய் அலுவலர்கள்சைலேந்தர் (நில எடுப்பு), மருத்துவர் சுரேஷ் (திட்டங்கள்), வாரிய நிதி ஆலோசகர் தரணிபாபு, தலைமை பொறியாளர்கள் கண்ணன், சரவணன் மற்றும் வாரிய உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.